5. அரசினர் தீர்மானம்

(அ) விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. பேரவையின் 41 (3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) மேற்கு தாம்பரம் ரயில் நிலையமருகில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''மேற்கு தாம்பரம் ரயில் நிலையத்திற்கு அருகில் 6—4—1979 அன்று தீ விபத்தினால் ஏற்பட்ட சொத்திழப்பு பற்றி''.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்):

தலைவரவர்களே செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ள விவரங்களாவன :—

தாம்பரம் ரெயில் நிலையத்துக்கருகில் இந்திரா காலனி எனும் குடியிருப்புப் பகுதியில் 6—4—79 அன்று, நடுப்பகல் 12 மணி அளவில் ஒரு தீ விபத்து ஏற்பட்டு, 17 குடிசைகளும், 17 கடைகளும் சேதமடைந்தன. தீ விபத்து பற்றி விசாரணை நடத்திய செங்கல்பட்டு சார் ஆட்சியர் (Sub-Collector) தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லையென்றும், ஆனால் தீ விபத்து எந்த தீச் செயலாலும் ஏற்பட்டதல்லவென்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த தீ விபத்தினால் குடிசைகளுக்கும், கடைகளுக்கும் ஏற்பட்ட சேதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட 17 குடிசைகளின் சொந்தக்காரர்களுக்கும் அவர்களது ஏழ்மை நிலையைக் கருதி குடிசை புனரமைப்புத் தொகையாக 7—4—79 அன்று தலா ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 1,700 வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 17 கடைச் சொந்தக்காரர்களும், தங்கள் வியாபாரத்தில் போதிய வருமானம் பெற்று வருவதால்

நிவாரணத் தொகை பெறத் தகுதியற்றவர்கள். இதுபோன்ற கடைப்பகுதிகளில் கடைச் சொந்தக்காரர்கள் ஓலைக் கூரைக்குப் பதிலாக ஆஸ்பெட்டாஸ் சிமெண்டினால் கூரைகள் போடலாம் என்றும், அவர்கள் தீயணைப்புக் கருவிகளைத் தங்கள் கடைகளில் வைத்துக்கொள்ளலாமென்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து தெரிவித்திருக்கிறார்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, தாம்பரம்இந்திரா நகர் காலனியில் 6—4—79 அன்று ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புகளைப்பற்றி அமைச்சரவர்களுடைய பேரவைச் செயலாளர் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்பதற்கான காரணத்தை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் அறிவிக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதனால் பரவாயில்லை. ஆனால் இம்மாதிரி எதிர்காலத்தில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். தீ பற்றாத மேற்கூறைகள் போடவேண்டும், புதிதாகக் கட்டப்படக்கூடிய கட்டடங்களுக்கு என்று மாநராட்சியின் மூலம் அறிவுறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, கடைகள் நெருக்கமாக அமைந்திருக்கின்ற காரணத்தால் ஒரு இடத்தில் தீ பற்றிக் கொண்டவுடன் தொடர்ந்து எல்லா இடங்களிலும் தீ பரவ வாய்ப்பாக இருக்கின்றது. ஆகவே இம்மாதிரி கூரைகள் போடுவதை முடிந்த மட்டும் தடுக்கவேண்டும். நெருப்புப் பற்றாத கூரையை வேய்வதற்கு அறிவுரைகள் வழங்கப் படவேண்டும். இது பற்றிய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விளக்கம் கூறக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 100 ரூபாய் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அந்த 17 கடைக்காரர்களுக்கு அதிக உதவி கிடைக்க, தேசீய வங்கியில் இருந்து உதவி கிடைக்க அரசுக்கு அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். அதை ஏற்க அரசு முன் வருமா?

திரு. பி. முசிறிப்புத்தன்: (அமைச்சரின் பேரவை செயலர்) அதிகத் தொகை தருவது பற்றி தனிக் கேள்விப் போட்டால் பதில் தருகிறேன். 17 வியாபாரிகளுக்கு தேசீயமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். வியாபரம் செய்வது மூலம் அவர்களுக்கு ஆதாயம் வருகிறது. அவர்களுக்குக் கடன் வழங்குவது சம்பந்தமாக அவர்கள் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் தொகுதியைப் பற்றி ஆறுமுகம் அவர்கள் கேட்டதற்கு நன்றி.